பாடசாலை மட்டக் கணிப்பீடு

School Based Assesment

முதலாம் தவணைக் கணிப்பீடு - 2025

தரம்-12 (2027)	பொருளியல் -1,11	நேரம்: 3.00 மணித்தியாலயங்கள் 10 நிமிடங்கள்

பெயர்/சுட்டெண்:.....

அறிவுறுத்தல்கள்:

- 1 தொடக்கம் 20 வரையான பல்தேர்வு வினாக்கள் அனைத்திற்கும் மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.
- வினாப்பத்திரம் இரண்டில் பகுதி "அ" இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி "ஆ" இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களிற்கு விடையளிக்குக.

1. **கூற்று 1**- "நேற்றிரவு எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது" என லக்சன் கூறினார்.
   கூற்று 2- "எரிவாயுவின் விலை குறைக்கப்படுவதானது மிகவும் நல்லது" என லவன் கூறினார்.
   (1) லக்சனும், லவனும் கூறியவை நியமக்கூற்றுக்களாகும்.
   (2) லக்சனும், லவனும் கூறியவை நேர் கூற்றுக்களாகும்.
   (3) லக்சனின் கூற்று நேர்கூற்று, லவனின் கூற்று நியமக் கூற்றாகும்.
   (4) லக்சனின் கூற்று நியமக்கூற்று, லவனின் கூற்று நேர் கூற்றாகும்.
   (5) இருவரது கூற்றுக்கள் நியமிக்கூற்றா? அல்லது நேர்கூற்றா? எனக்குறிப்பிட முடியாதுள்ளது

2. பின்வருவனவற்றில் பொருளாதாரவளம், இலவசவளம் ஆகியவற்றை சரியாகக் காட்டும் தொகுதி

	பொருளாதார வளம்	இலவச வளம்
(1)	தளபாடம்	மரக் குற்றி
(2)	இயற்கைகாடுகள்	புவியீர்ப்பு
(3)	சூரியமின்கலம்	இயற்கைக் காடு
(4)	உழைப்பு	மூலதனம்
(5)	சூரிய ஒளி	பாடசாலைக் கட்டடம்

3. எல்லா முயற்சியாளர்களதும் ஒரு அவசியமான தேவைப்பாடாக கருதப்படுவது எதுவாக இருக்கும்
   (1) வாடிக்கையாளர்களை கவருதல்
   (2) இருப்புக்களைக் கொள்வனவு செய்தல்
   (3) ஊழியர்களை முகாமை செய்தல்
   (4) ஆபத்துக்களை ஏற்றல்
   (5) உற்பத்திகளை மக்களிடையே சமனாக பகிர்தல்

4. குறித்த தேர்வொன்றின் போது அமையச்செலவு பூச்சியமாவது
   (1) குறித்த பொருளாதாரம் முழு வேலைவாய்ப்பு நிலையில் உள்ள போது
   (2) பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படாத வளங்கள் உள்ள போது
   (3) கைக்கடிகார உற்பத்திக்காக எல்லா வளங்களும் பயன்படுத்தப்படும் போது
   (4) தரப்பட்ட பொருளாதாரம் உற்பத்தி வினைத்திறன் கொண்டது
   (5) அருமையான வளங்களின் மாற்றுப் பயன்பாடு கொண்டுள்ள போது

5. மனித மூலதனத்தின் முக்கிய கூறு எது?
   (1) இயற்கை வளம் (2) தொழில்நுட்பம் (3) கல்வி மற்றும் திறன்
   (4) பணம் (5) நிலம்

Past Papers Wiki


6. கீழ்கண்ட கூற்றுக்களில் எது தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும் இடையிலான தொடர்பினை சரியாக விளக்குகின்றது
   (1) தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சியின் விளைவாக உருவாகின்றது.
   (2) சிறப்புத் தேர்ச்சி தொழிற்பிரிப்பின் விளைவாக உருவாகின்றது.
   (3) இரண்டும் ஒரு பொருளையே குறிக்கின்றது.
   (4) இரண்டும் அரச தலையீட்டின் மூலம் உருவாகின்றது.
   (5) இரண்டும் உற்பத்தியை குறைக்கும் செயலாகும்

7. திட்டமிடல் பொருளாதாரத்தில் உற்பத்தி எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது
   (1) நுகர்வோரின் விருப்பத்தின் அடிப்படையில் (2) விலை உயர்வு தாழ்வின் அடிப்படையில்
   (3) அரசின் மையத்திட்டத்தின் அடிப்படையில் (4) வெளிநாட்டு சந்தையின் அடிப்படையில்
   (5) தனியார் நிறுவனங்களின் முடிவின் அடிப்படையில்

8. கீழ் கண்டவற்றில் எது சமூக சந்தைப் பொருளாதாரத்தின் பண்பல்ல
   (1) அரசு நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பாதுகாப்பு வழங்குதல்
   (2) தொழில் முயற்சிக்கு ஊக்கமளித்தல்
   (3) சுதந்திரமான போட்டியை ஊக்குவித்தல்
   (4) மத்திய திட்டமிடல் மூலம் உற்பத்தி முடிவுகள் தீர்மானிக்கப்படுதல்
   (5) வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைக்கும் கொள்கைகள்

9. யாருக்காக உற்பத்தி செய்வது என்ற பிரச்சனையின் தீர்வை சரியாக விளக்குவது
   (1) இது முழுமையாக அரசு தீர்மானிப்பது
   (2) இது வளங்களின் பயன்பாடு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை பொறுத்தது
   (3) இது சமூகத்தின் வருமானப் பகிர்வையும் வாங்கும் ஆற்றாலையம் பொறுத்தது தீர்மானிக்கப்படுகின்றது
   (4) இது உற்பத்தியர்களின் இலாப நோக்கத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுகின்றது
   (5) இது வெளிநாட்டு வர்த்தக கொள்கைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது

10. பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயலுமை பற்றிய வரைபு வரைபடத்தில் காட்டப்பட்ட முறையில் உற்பத்திப் புள்ளி **A** யிலிருந்து **B** வரை பெயர்வதற்கு காரணம் பின்வருவனவற்றுள் எது?
    (1) மொத்த கேள்வி குறைவடைதல்
    (2) வெளிநாட்டிலிருந்து பொருள் இறக்குமதி செய்யப்படல்
    (3) வெளிநாட்டவர் தமது முதலீடுகளை அகற்றுதல்
    (4) இயற்கை வளங்களின் ஓர் தொகுதி அழிவடைதல்
    (5) ஊழியர் தொகுதியொன்று மண்சரிவினால் அழிவடைதல்



11. உற்பத்திச்சாத்திய வளையியினை வலது புறம் **நகர்த்தாத** காரணி
    (1) மனித மூலதன வருத்தியினால் முதலீடு அதிகரித்தல்
    (2) ஓரலகு உள்ளீட்டுக்கான வெளியீடு அதிகரித்தல்
    (3) வெளிநாட்டு முதலீடு அதிகரித்தல்
    (4) வளப்பாவனை அதிகரித்தல்
    (5) முயற்சியாளர்களை உருவாக்க அரச ஆதரவினை பெறுதல்

12. பின்வருவனவற்றுள் எந்தப் பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றது
    (1) பயன்பாடு அதிகமான பொருள்
    (2) பதிலீடு அதிகமான பொருள்
    (3) நுகர்வைக் காலம் தாழ்த்த முடியாத பொருள்
    (4) வருமானத்தில் செலவிடும் சதவீதம் உயர்பெறுமதி கொள்ளும் பொருள்
    (5) கருத்தில் கொள்ளப்படும் காலப்பகுதி நீண்டதாக உள்ள போது

13. கேள்விச் சமன்பாடு Qd= 60-P எனின் விலை 20 ரூபாவாக இருக்கும் போது விலைக் கேள்வி நெகிழ்ச்சியின் பெறுமதி யாது?

    (1) -0.25 (2) -0.5 (3) –0.75 (4) -1.25 (5) -1

14. ஒரு பொருளின் கேள்வி வளையி மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லுமாயின் பின்வருவனவற்றில் சரியான கூற்றாக அமைவது எது?
(1) நெகிழ்ச்சி படிப்படியாக குறைவதுடன் மொத்த வருமானம் படிப்படியாக அதிகரிக்கும்
(2) நெகிழ்ச்சியும் மொத்த வருமானமும் படிப்படியாக அதிகரிக்கும்
(3) நெகிழ்ச்சி படிப்படியாக அதிகரிப்பதுடன் மொத்த வருமானம் படிப்படியாக குறைவடையும்
(4) நெகிழ்ச்சியும் மொத்த வருமானமும் படிப்படியாகக் குறைவடையும
(5) நெகிழ்ச்சி படிப்படியாகக் குறைவடைவதுடன் மொத்த வருமானம் படிப்படியாக அதிகரித்து பின்னர் குறைவடையும்

15. குறித்த ஒரு பொருளின் கேள்வி அளவு என்பது பின்வருவனவற்றில் எதனால் பிரதிபலிக்கப்படும்
(1) வெவ்வேறு விலைகளுக்கும் கேள்வி அளவுக்கும் இடையில் உள்ள தொடர்பின் மூலம்
(2) கேள்விக் கோட்டில் ஓர் புள்ளி மூலம்
(3) கேள்வி அட்டவணை மூலம்
(4) சந்தைக் கேள்வி மூலம்
(5) கேள்விக் கோட்டின் அசைவின் மூலம்

16. விலைக்கேள்வி அலகு நெகிழ்ச்சியுடையதான கேள்விக் கோட்டில் மொத்த வருமானம் எவ்வாறு மாற்றமடையும்
(1) விலை குறையும் போது அதிகரிக்கும்
(2) விலை குறையும் போது குறையும்
(3) விலை எத்திசையில் மாற்றமடைந்தாலும் மாறாது
(4) விலை அதிகரிக்கும் போது அதிகரிக்கும்
(5) விலை மாறும் திசையில் செல்லும்

17. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி பெறுமதி நேர்கணியமாக ஒன்றை விட குறைவாக அமையுமாயின் அப்பண்டம்

(1) இழிவுப் பண்டம் (2) அத்தியாவசிய பண்டம் (3) சொகுசுப் பொருள்
(4) பொதுப்பண்டம் (5) கிபன் பண்டம்

18. ஒரு பொருளின் விலை 10% குறைய கேள்வி அளவு 20% அதிகரித்தால் அந்தப் பொருளின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்படும்
(1) நெகிழ்வற்றது
(2) அலகு நெகிழ்ச்சி
(3) நெகிழ்வுடையது
(4) முற்றிலும் நெகிழ்வற்றது
(5) முற்றிலும் நெகிழ்வுடையது

PAST PAPERS WIKI

19. ஒரு நேர் கோட்டு கேள்விக் கோட்டில் விலை குறையும் போது நெகிழ்ச்சி எப்படி மாறும்?
(1) அதிகரிக்கும்
(2) குறையும்
(3) மாறாது
(4) முதலில் அதிகரித்து பின்னர் குறையும்
(5) (நிரந்தரமாக பூச்சியமாகும்

20. மோட்டார் சைக்கிளின் விலை அதிகரிக்கின்ற போது எரிபொருளுக்கான கேள்வி 30% னால் வீழ்ச்சியடைந்தது. மோட்டார் சைக்கிள் மற்றும் எரிபொருளுக்கமான குறுக்குக்கேள்வி நெகிழ்ச்சி -3.0 இதன்படி மோட்டார் சைக்கிளின் விலை மாற்றமடைவது

(1) ரூபா 60000 லிருந்து 80000 வரை (2) ரூபா 80000 லிருந்து 85000 வரை
(3) ரூபா 80000 லிருந்து 88000 வரை (4) ரூபா 60000 லிருந்து 72000 வரை
(5) ரூபா 80000 லிருந்து 90000 வரை

Past Papers Wiki

பகுதி 11

(அ,ஆ பகுதிகளில் இருந்து **குறைந்தது இரண்டு வினாக்களை** தெரிவு செய்து மொத்தமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக)

"அ" பகுதி

01) 1. பொருளாதாரவளம், இலவசவளம், இயற்கை வளம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (6 புள்ளிகள்)

2. உழைப்பிற்கும் முயற்சியாண்மைக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினை குறிப்பிடுக (4 புள்ளிகள்)

3. அமையச் செலவு எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக. அது ஏற்படுவதற்கான காரணிகள் எவை? (5 புள்ளிகள்)

4. பின்வருவன பொருளியலின் சிற்றின, பேரினப் பொருளியலின் எவ்வகைக்குள் உள்ளடக்குவீர்

a. பணவீக்கம்

b. பொருளாதார வீழ்ச்சி

c. நிறுவனம் ஒன்றின் உற்பத்தி செயற்பாடு

d. நாட்டின் காலநிலை தாக்கத்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைதல்

e. வெள்ளப் பாதுகாப்புக்காக அரசு செலவிடும் போது மற்றய துறைகளுக்கான நிதி குறைதல் (5 புள்ளிகள்)

02) 1. எந்தவொரு பொருளாதாரமும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதார பிரச்சனைகள் எவை? (3புள்ளிகள்)

2. சந்தைப் பொருளாதாரம் கட்டளைப் பொருளாதாரம் என்பவற்றுக்கிடையிலான **வேறுபாடுகள்** நான்கு தருக? (4 புள்ளிகள்)

3. சோசலிச சந்தைப் பொருளாதாரத்தின் பண்புகள் நான்கு குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

4. விலைப்பொறி முறை என்பதனால் கருதப்படுவது யாது? இதன் முக்கிய கருமங்கள் யாவை? (4 புள்ளிகள்)

5. சந்தைப் பொருளாதாரமானது எப்போதும் வளங்களை வினைத்திறனுள்ள விதத்தில் ஒதுக்கீடு செய்யக்கூடியதாக இருக்குமா? உமது விடையினை விளக்குக (5 புள்ளிகள்)

03) 1. உற்பத்தி இயல்தகவு வளையி அடிப்படையாக கொண்டுள்ள எடுகோள்கள் யாவை? (5 புள்ளி)
பொருளாதாரம் ஒன்றிற்கான உற்பத்தி சாத்திய எல்லை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

முதலீட்டுப் பண்ட உற்பத்தி	நுகர்வுப் பண்ட உற்பத்தி
0	32
5	30
10	26
15	20
20	12
25	0

2. எல்லை அமையச் செலவினைக் கணிப்பிட்டு அமையச் செலவின் தன்மையும் அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக (6 புள்ளிகள்)

3. "ஒரு பொருளாதாரத்தில் வேலையின்மை நிலமை நிலவும் போது சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகும்" இக்கூற்றை ஏற்றுக் கொள்கின்றீரா? விளக்குக? (4 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றை விவசாய உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்திச் சாத்திய வளையியில் குறித்துக் காட்டுக

1. கடும் வெள்ளம் காரணமாக உட்கட்டுமானங்கள் அழிவடைதல்
2. வெள்ளத்தினால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன
3. வெள்ளத்திற்கு பின்னர் இலங்கை அதிகளவிலான சர்வதேச உதவிகளை பெறுவதுடன் உட்கட்டுமானங்களை மீளமைத்தல்
4. வெள்ளத்தினால் வேலையின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு
5. வெள்ளத்தினால் விவசாயத்துறையில் ஈடுபட்ட தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் மரணமடைதல் (5 புள்ளிகள்)

"ஆ" பகுதி

04) 1. பண்டமொன்றுக்கான பயன்தருகேள்வி எனும் எண்ணக்கருவில் உள்ளடங்கும் விடயங்கள் யாவை? (3 புள்ளிகள்)

2. கேள்வி விதியினை விளக்குக, கேள்வி விதிக்கான எடுகோள்கள் யாவை? (4 புள்ளிகள்)

3. சாதாரண பண்டமொன்றின் விலை விழ்ச்சியினால் வருமான விளைவு பதிலீட்டு விளைவை எவ்வாறு வரையறுப்பீர் (4 புள்ளிகள்)

4. கேள்வித்தொகை மாற்றம் கேள்வி மாற்றம் என்பவற்றை விளக்கி அதனை வரைபில் காட்டுக (6 புள்ளிகள்)

5. கேள்விக் கோட்டின் வலப்புற நகர்வுக்கு ஏதுவாகும் மூன்று காரணிகளை பட்டியல்படுத்துக (3 புள்ளிகள்)

05) 1. புள்ளி கேள்வி நெகிழ்ச்சி வில் கேள்வி நெகிழ்ச்சி என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

2. QD=120-10p என்ற கேள்விச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி 6 ரூபா விலையில் கேள்வியின் விலை நெகிழ்ச்சியை கணிப்பிடுக இதன் போது உற்பத்தியாளர் வருமானம் எவ்வளவாக இருக்கும்? (5 புள்ளிகள்)

3. நுகர்வுப் பொருள் ஒன்றின் விலைசார் நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் ஐந்தினை குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

4. பின்வரும் ஒவ்வொரு பண்டங்களும் எவ்வகைப் பண்டங்கள் எனக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

பண்டம்	நெகிழ்ச்சி வகை குணகம்
A. விலைசார் கேள்வி நெகிழ்ச்சி	-0.5
B. வருமானக் கேள்வி நெகிழ்ச்சி	-1.2
C. குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி	-1.6
D. வருமானக் கேள்வி நெகிழ்ச்சி	+1.0

5. விலைக் கேள்வி நெகிழ்ச்சி மாற்றமடையாத சந்தர்ப்பங்கள் எவை? (3 புள்ளிகள்)

06) 1. QS= -120+10p என்று நிரம்பல் சார்பினை கொண்ட பண்டமொன்றின் நிரம்பல் சார்பு QS=10p ஆக மாற்றமடைவதற்கான காரணிகள் ஐந்தினை குறிப்பிடுக (5 புள்ளிகள்)

2. பின்வருவன ஒவ்வொன்றும் எத்தகைய நெகிழ்ச்சி நிலைமைகளில் காணப்படும் எனக் கூறுக.

a) பண்டமொன்றின் விலை அதிகரித்தபோது நுகர்வோன் செலவு அதிகரித்தது

b) பண்டமொன்றின் விலை அதிகரித்தபோது வழங்குனர் வருமானத்தில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை.

c) பண்டமொன்றின் விலை அதிகரித்த போது வழங்குனரின் வருமானம் பூச்சியமாக மாறியது.

d) பண்டமொன்றின் விலை அதிகரித்த போது நுகர்வோன் செலவு விலை அதிகரித்த வீதத்தினால் அதிகரித்தது (4 புள்ளிகள்)

3. குறுக்கு கேள்வி நெகிழ்ச்சியை கணிப்பிடுவதன் முக்கியத்துவங்கள் யாவை? (4 புள்ளிகள்)

4. ஒரு பொருளின் கேள்விக் கோடு செவ்வக அதிபர வளையியாக உள்ளது. பொருளின் விலை 40 ரூபாவாக இருக்கும் போது கேள்வித்தொகை 200 அலகாகும். 50 ரூபா விலையில் கேள்வித் தொகை யாது? (2 புள்ளிகள்)

5. நிரம்பல் தொகை மாற்றம் என்பதனை வரையறுக்கும் போது கையாளப்படுகின்ற எடுகோள்கள் எவை? (5 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library